Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. STC.NO. 108/2023
DEPOSITION OF DEFENSE SIDE EVIDENCE No.1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணதிலகன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | வரதராஜன் | தொழில் | இரயில்வே பணி (ஓய்வு) |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 69 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 18th day of June 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

1. நான் ஜோலார்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் இரயில்வே துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2017ம் வருடம் நான் ஜோலார்பேட்டையில் சொந்தமாக வீடு கட்டினேன். அந்த சமயம் எனக்கு பண பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. என்னுடன் இரயில்வே துறையில பணியாற்றிய திரு. தீபக் என்பவர் அவருக்கு தெரிந்த ஒரு நபர் இருப்பதாகவும், அவர் சீட்டு நடத்தி வருவதாகவும், அவரிடம் சீட்டில் நான் சேர்த்துவிடுகிறேன் என்றும் கூறினார். அதன்பின்பு திரு.தீபக் என்பவர் குட்டி என்கிற ஞானசேகர் நடத்தி வந்த ரூ 2 லட்சத்திற்கான சீட்டில் என்னை சேர்த்துவிட்டார். சீட்டை ரூ.1,30,000/-க்கு தள்ளி நான் எடுத்தேன். பணத்தை கொடுப்பதற்கு முன்பு நான் புதிய உறுப்பினர் என்பதால் பணத்திற்கு ஈடாக பட்டா சிட்டா இருந்தால்கொடுக்குமாறு கூறினார்.

2. அதற்கு நான் என்னிடம் பட்டா சிட்டா இல்லை என்று கூறியபோது, நான் இரயில்வே துறையில் பணியாற்றியதால் எனது ஓய்வூதிய புத்தகத்தை கேட்டு வாங்கி பார்த்தார். அதன்பின்பு ஓய்வூதிய புத்தகம் மட்டும் போதாது என்று கூறி புகார்தாரர் என்னிடம் ஒரு எழுதப்படாத காசோலையை ஈடாக பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னிட்டு சீட்டை நான் முழுவதுமாக செலுத்திய பின்பும் நான் ரூ 13,460/- செலுத்த வேண்டியது இருந்தது. அப்போது நான் ஏற்கனவே ஈடாக கொடுத்துள்ள ஓய்வூதிய புத்தகம் மற்றும் காசோலையை கொடுத்தால் பணத்தை தருவதாக தெரிவித்தேன். ஆனால் பல நபர்களிடம் ஆவணங்கள் வாங்கி வைப்பதால் அந்த ஆவணஙகள் எங்கே என்று தெரியவில்லை என்று புகார் தாரர் என்னிடம் தெரிவித்தார்.

3. என்னை சீட்டில் சேர்த்துவிட்ட திரு.தீபக் என்பவர் மூலமும் எனது ஆவணஙகளை கேட்டு பார்த்தேன். அவரும் ஆவணங்களை தேடி பார்த்து வாங்கி தருவதாக கூறினார். 23.07.2022 அன்று தீபக் என்பவர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். அதன்பின்னிட்டு 2022 வருடம் 6-ம் மாதம் புகார்தாரரிடம் சென்ற நான் கேட்டபோது, நான் ரூ 4 லட்சம் கடன் பெற்றதாக பொய்யாக தெரிவித்தார். இவ்வாறு மோசடியாக பணத்தை புகார்தாரர் கொடுக்காமல் பணத்தை கொடுப்பதாக தெரிவிப்பதால் செய்வது அறியாது இருந்தபோது, நான் ஈடாக கொடுத்திருந்த காசோலையை வைத்து புகார்தாரர் என்மீது இவ்வழக்கு தொடுத்துள்ளார். நான் புகார்தாரரரிடம் பெற்ற பணம் முழுவதும் செலுத்தி விட்டேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**